**செ. கு. எண்:093** **நாள்: 03.07.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 3.7.2017

சென்னை பெருநகர காவல், கொருக்குபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. R.சம்பத் என்பவர் 26.5.2017 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு K. பழனியப்பன் என்பவர் 1.6.2017 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியைடுயம்;

திருச்சி மாநகரம், மதுவிலக்கு அமலாக்க பிரிவில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு கி. விஸ்வநாதன் என்பவர் 5.6.2017 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, வீராபுரம், தமிழ்நாடு சிறப்பு காவல் 3-ம் அணியில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கே. ராதாகிருஷ்ணன் என்பவர் 13.6.2017 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட நிகழ்வுகளில் உயிரிழந்த திரு சம்பத், உதவி ஆய்வாளர், திரு பழனியப்பன் தலைமைக் காவலர், திரு விஸ்வநாதன், ஆய்வாளர், மற்றும் திரு ராதாகிருஷ்ணன், உதவி ஆய்வாளர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட நான்கு காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**